# DEPOSITION OF WITNESS
## In the Court of Judicial Magistrate No.I, Mettur
## Case No : C.C.No.135/2022

Prosecution witness : **அ.சா. 8** **Date : 13.10.2023**

| | |
|---|---|
| **Name : Dr. ராதாகிருஷ்ணன்** | Caste : MBC |
| **Father's Name :** மகாலிங்கம் | Calling : Senior Assistant Surgeon |
| Village : மேச்சேரி | Religion : Hindu |
| Taluk : மேட்டூர் | Age : 42 |

( A1 and A3 present. A2 absent. Filed 317 CrPC petition and allowed)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் மேட்டூர் அரசு தலைமை மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். 06.07.2021ம் தேதி நான் பணி மருத்துவராக பணியில் இருந்தபோது சேட்டு, அவரது மனைவி அமிர்தம் என்பவருடன் மதியம் 12.15 மணியளவில் தன்னை 4 தெரிந்த நபர்கள் அதில் 3 ஆண்நபர்கள், 1 பெண் நபர் சீரங்கனூர் கல் குவாரி அருகே வைத்து பாலக்கட்டை மற்றும் கல்லாலும் காலை 7.30 மணியளவில் தன்னை அடித்ததாக கூறினார். அவரை பரிசோதித்த போது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது

1) இடது காது ஓரத்தில் சிராய்ப்புக்காயம் 1 x .5 செ.மீ அளவில் காணப்பட்டது

2) மேல் தாடையின் முன் பகுதியில் ஒரு பல் விழுந்து காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் 08.07.2021ம் தேதி மதியம் 1 மணியளவில் சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்பட்டார். ஆனால் அவர் சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சை பெறவில்லை என சேலம் அரசு மருத்துவமனையின் RMO அவர்கள் கொடுத்த ஆவணங்களின் படி அவருக்கு ஏற்பட்ட காயம் குறித்து இறுதி காயச்சான்றிதழ் வழங்க முடியவில்லை. **(சேட்டு என்பவரது விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.4. மருத்துவரின் கருத்துரை அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2) இதே சம்பவத்தில் தொடர்புடைய மணிகண்டன் என்பவரை அவரது அம்மா அமிர்தம் என்பவர் 06.07.2021ம் தேதி மதியம் 12 மணிக்கு மருத்துவமனைக்கு அழைத்து வந்தவரை விசாரிக்க தன்னை 4 தெரிந்த நபர்கள் அதில் 3 ஆண்நபர்கள், 1 பெண் நபர் சீரங்கனூர் கல் குவாரி அருகே வைத்து பாலக்கட்டை மற்றும் கல்லாலும் காலை 7.30 மணியளவில் தன்னை அடித்ததாக கூறினார். அவரை பரிசோதித்த போது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது

1) வலது பக்க முன்மண்டையில் சிராய்ப்புக்காயம் 4 x .5 செ.மீ அளவில் காணப்பட்டது.

2) வலது கால் முட்டியில் ரத்தக்கட்டு சுமார் 1 x .5 செ.மீ அளவில் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **(மணிகண்டன் என்பவரது விபத்து பதிவேட்டு நகல் அசாஆ.6, காயச்சான்றிதழ் அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) என்னிடம் சிகிச்சைக்கு வந்த சேட்டு, மற்றும் மணிகண்டன் ஆகியோர் யார் அடித்தார்கள் என்று பெயரை குறிப்பிட்டு என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். மணிகண்டனுக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரிதான். நாளடைவில் சரியாகக்கூடிய காயம் என்றால் சரிதான். மணிகண்டனுக்கு ஏற்பட்ட காயங்கள் அவர் வேகமாக சென்று கீழே விழுந்தாலோ அல்லது வண்டியில் சென்று விழுந்தாலோ மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். சேட்டு என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தபோது ஒரு பல்தான் விழுந்திருந்தது என்றால் சரிதான். சேட்டு, மணிகண்டன் ஆகிய இருவரும் அரசு மருத்துவமனைக்கு வருவதற்கு முன்னரே சிகிச்சை ஏதேனும் எடுத்துக்கொண்டார்களா என்றால் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை. அடிப்பட்டவுடன் அரைமணி நேரத்திற்குள்ளாக வருவதற்கும் 4 மணிநேரம் கழித்து வருவதற்கும் காயத்தில் வித்தியாசம் காணப்படும் என்றால் ரத்தக்காயம்

ஏற்பட்டிருந்தால் ரத்தம் உறைந்த நிலையில் காணப்படும். நான் பல்லிற்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுத்த போது காயம்பட்ட இடத்தில் மண் துகள்கள் ஏதேனும் காணப்பட்டதா என்றால் பல் விழுந்த நிலையில் இருந்தது. ரத்தக்காயம் காணப்பட்டது. சம்பவம் காலை 7.30 மணிக்கு நடந்தது என்றும் மதியம் தான் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார்கள் என்பதால் ரத்தக்காயம் இருந்திருக்காது என்று சொன்னால் ரத்தம் உறைந்த நிலையில் இருந்தது. சேட்டுவிற்கு 6 மாதங்களுக்கு முன்பே பல் விழுந்துவிட்டது என்று சொன்னால் வாய்ப்பில்லை. பல் மருத்துவர் பரிசோதிக்கவில்லை என்றால் சேலம் அரசு மருத்துவமனைக்கு அதற்குதான் பரிந்துரை செய்யப்பட்டது ஆனால் சேட்டு அங்கு செல்லவில்லை.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஓம்/−அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**